# இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.2.2.F

பின்னங்கள் - மேற்சிந்தனை கணக்குகள் - தநாஅபு பயிற்சி - 1.2.12-13

## பின்னங்கள் - மேற்சிந்தனை கணக்குகள் - தநாஅபு பயிற்சி - 1.2.12-13

12. வண்ணம் பூசுபவர் சுவற்றின் $\frac{3}{8}$ பகுதியை வண்ணம் பூசினார். அதில் மூன்றில் ஒரு பங்கு மஞ்சள் நிற வண்ணம் பூசினார் எனில் மொத்தச் சுவற்றில் மஞ்சள் நிறம் பூசப்பட்ட பகுதியின் பின்னம் என்ன?

வண்ணம் பூசிய பகுதியின் அளவு $= \frac{3}{8}$

அதில் மஞ்சள் நிறம் பூசப்பட்ட பகுதி $= \frac{1}{3}$

மொத்தச் சுவற்றில் மஞ்சள் நிறம் பூசப்பட்ட பகுதி $= \frac{3}{8} \times \frac{1}{3}$

$= \frac{\cancel{3}^{1}}{8} \times \frac{1}{\cancel{3}_{1}}$

$= \frac{1}{8} \times \frac{1}{1}$

$= \frac{1}{8}$

மொத்தச் சுவற்றில் மஞ்சள் நிறம் பூசப்பட்ட பகுதியின் பின்னம் $\frac{1}{8}$ ஆகும்.

13. முயல் தனது உணவை எடுக்க $26\frac{1}{4}$ மீ தூரத்தைக் கடக்க வேண்டும். ஒரு தாவலுக்கு $1\frac{3}{4}$ மீ தூரத்தைக் கடக்குமானால் தனது உணவை எடுக்க எத்தனை முறை தாவ வேண்டும்?

முயல் கடக்க வேண்டிய தூரம் $= 26\frac{1}{4}$ மீ

ஒரு தாவலில் முயல் கடக்கும் தூரம் $= 1\frac{3}{7}$ மீ

முயல் உணவை எடுக்க எத்தனை முறை தாவ வேண்டும் $= 26\frac{1}{4} \div 1\frac{3}{7}$

$= \frac{(26 \times 4) + 1}{4} \div \frac{(1 \times 4) + 3}{4}$

$= \frac{104 + 1}{4} \div \frac{4 + 3}{4}$

$= \frac{105}{4} \div \frac{7}{4}$

$= \frac{105}{4} \times \frac{4}{7}$

$= \frac{\cancel{105}^{15} \times \cancel{4}^{1}}{\cancel{4}_{1} \times \cancel{7}_{1}}$

$= \frac{15 \times 1}{1 \times 1}$

$= \frac{15}{1}$

$= 15$

முயல் தனது உணவை எடுக்க 15 முறை தாவ வேண்டும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 26th April, 2022 :: 16:01 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**